1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியை கொடுத்தவர் ஒருமுறை துணைக் கேள்வி கேட்ட பிறகு மீண்டும் கேள்வி கேட்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை. இந்தக் கேள்வி ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியது. எல்லாவற்றுக்கும் விளக்கமாகப் பதிலும் வந்துவிட்டது. இரண்டாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஏற்கெனவே ஒரு தேர்வு செய்யப்பட்டதை 'வேக்கண்டாக' வைக்க வேண்டிய அவசியம் என்ன? திரு. சந்திரசேகர் தேர்வு ரத்து செய்யப் பட்டுவிட்டதால் அவருக்கு அடுத்தபடியாக அதிக மார்க் வாங்கிய வரை அந்த இடத்தில் நியமிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அந்த ஏற்பாட்டைச் செய்ய இப்போது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த நிலையில் அத்தகைய ஒரு காலியிடம் ஏற்பட்டால் அது அப்படியே ரத்தாகிவிடும். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் 1977-ம் ஆண்டு அதைப் பரிசீலனை செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய விகிதங்கள் இதில் கிடைப்பதில்லை என்கின்ற காரணத்தால் ஓராண்டு அல்லது ஒருமுறை இத்தகைய தேர்வுகள் நடைபெறுகின்ற போது போதுமான தாழ்த்தப்பட்ட மக்கள் வரவில்லை என்றால் அந்த இடங்களை அடுத்த முறை தேர்வு நடைபெறுகிறபோது சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விதிகளைத் திருத்தி இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள், அந்த ஆண்டே அதிகமான மார்க் வாங்கிய இன்னொரு தாழ்த்தப்பட்ட மாணவர் இருந்திருப் பாரேயானால் அவருக்குக் கொடுக்கலாமே என்று கேட்கிறார், அதற்கு விதிகளிலே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு,

வினா எண் 733—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் மூன்று சதவீத இடங்களை ஒதுக்கியுள்ளது போல் மாநில அரசும் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் இட ஒதுக் கீடு செய்யும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1979 ஏப்ரல் 25

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கென்று வாரியம் ஏதேனும் இருக்கின்றதா ? ஆமெனில் அதன் உறுப்பினர்கள் யார் யார்? அந்த வாரியத்தால் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை விவரிக்க இயலுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோருக்கென்று ஒரு வாரியம் இருக்கின்றது. அதனுடைய முக்கியப் பணிகள் கீழ்வருமாறு :

(1) உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை ஆராய்வது ;

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களை வகுத்தல் ;

(3) உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்தல் ;

(4) உடல் ஊனமுற்றவர்களை ஆதரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சமூக நல நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் நிதி உதவியளித்தலைக் குறித்து ஆராய்தல் ;

(5) உடல் ஊனமுற்றவர்களுக்காக கல்வி, பயிற்சி மறுவாழ்வு துறைகளில் மறுவாழ்வுக்காக செயல்படும் நிறுவனங்களை ஒன்று திரட்டுதல்.

இந்த வாரியத்தின் தலைவர் சமூக நல அமைச்சர். அதனுடைய உப தலைவர் சமூகநலத்துறையின் செயலாளர். அதனுடைய உறுப்பினர்கள் தொழிலாளர் நலச் செயலாளர். நிதித்துறைச் செயலாளர், கல்வித்துறைச் செயலாளர், சமூக நலத் துறை இயக்குநர், வேலை வாய்ப்பு—பயிற்சித்துறை இயக்குநர். மருத்துவப்பணி, குடும்ப நலத்திட்ட இயக்குநர், மருத்துவக்கல்வி இயக்குநர், மறுவாழ்வு பயிற்சி நிலையத்தின் கண்காணிப்பாளர், மாநில சமூக நலக் குழுவின் தலைவர் ஆகியோரும் மற்றும் அரசு சார்பற்றவர்கள் என்ற முறையில் திரு. என். இ. எஸ். ராகவாச்சாரி, தலைவர், உடல் ஊனமுற்றோருக்கான சங்கம், திரு. அந்தோணிசுவாமி, ஸ்வீடன் செஞ்சிலுவை மறுவாழ்வு தொழில், காட்பாடி, மற்றும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளாக பொதுச் செயலாளர், இந்து குஷ்ட நிவாரணச் சங்கம், கௌரவச் செயலாளர், மனநிலை குறைவுள்ளோருக்கான பால விஹார் பள்ளி, இயக்குநர், காது கேளாதவர் சங்கம், சென்னை மற்றும் சென்னை வர்த்தகசபை, இந்துஸ்தான் வர்த்தக சபை, தென்னிந்திய வேலை கொடுப்பவர் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெறுகின்றார்கள். அடுத்து மருத்துவத்துறையின் சார்பாக டாக்டர் டி. கே. சண்முகசுந்தரம், மற்றும் டாக்டர் ஈ. டி. செல்வம், டாக்டர் எஸ். காமேஸ்வரன் ஆகியோரும் உறுப்பினர்களாகவும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் உதவி இயக்குநர், சென்னை அவர்கள் செயலாளராகவும் செயலாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

1979 ஏப்ரல் 25]

உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு தமிழக அரசு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றது. அதன்மூலம் உடல் ஊனமுற்றோர் நல கூட்டுறவுச் சங்கம், சென்னை, வேலூர் ரௌன்ட் டேபிள் 23 டிரஸ்ட், மித்ரா, சென்னை பத்திலே இருக்கின்ற பாலவிஹார், தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு அசோசியேஷன் ஆகிய 5 நிறுவனங்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர 71 உடல் ஊன முற்றோருக்குச் செயற்கை உறுப்புக்களை வாங்கித்தருவதற்கும் இந்த வாரியம் பணஉதவி அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Training to physically handicapped persons.

*Q. No. 734—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(a) whether the Government have proposed to provide grants/ loans to the private sector industries who impart training to physically handicapped persons; and

(b) if so the details of the firms who have availed of the benefits under the scheme?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கான தொழில் பயிற்சி நிலையங்களை நடத்துகின்ற தனியார்களுக்கு மானியங்கள் அளிக்கவில்லை என மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்றார்கள், ஆனால் உடல் ஊனமுற்றவர்களுக்கு மாவட்ட வாரியாக ஊன்று கோல்களும், 3 சக்கர வண்டிகளும் வழங்கப்படுவது குறைவாக இருக்கின்றதே. இன்னும் பல பேர் அப்படிப்பட்டவர்கள் எழுந்து நடக்க முடியாத நிலையில் இருக்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் அப்படிப்பட்ட 3 சக்கர வண்டிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் 3 சக்கர சைக்கிள் வண்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தனிப்பட்ட சேவை நல இல்லங்களைச் சார்ந்தவர்களும் சில இடங்களில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு மேல் அரசின் நிதிநிலை இடம் தராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.